இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

### வத்திக்கான் வளாகத்தில் கூடியிருந்த ஏறக்குறைய 40,000 இறைமக்களுக்கு குருத்து ஞாயிறு வாழ்த்துக்களையும், புனித வார வாழ்த்துக்களையும் தெரிவித்தார் திருத்தந்தை பிரான்சிஸ்

# குருத்து ஞாயிறு வாழ்த்துக்களைத் தெரிவித்த திருத்தந்தை பிரான்சிஸ்



வத்திக்கான் வளாகத்தில் கூடியிருந்த ஏறக்குறைய 40,000 இறைமக்களுக்கு குருத்து ஞாயிறு வாழ்த்துக்களையும், புனித வார வாழ்த்துக்களையும் தெரிவித்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

ஏப்ரல் 13, ஞாயிற்றுக்கிழமை வத்திக்கான் புனித பேதுரு பெருங்கோவில் வளாகத்தில் புனித வாரத்தின் முதல் நாளாகிய குருத்துஞாயிறு திருவழிப்பாட்டில் பங்கேற்ற மக்களை வாழ்த்துவதற்காக, திருப்பலி நிறைவில் பீடத்தை வந்தடைந்து, இறைமக்களை வாழ்த்தினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

கடந்த சில மாதங்களாக மூச்சுக்குழல் அழற்சி நோயால் பாதிக்கப்பட்டு, மருத்துவ சிகிச்சைகளைப் பெற்று வரும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், சாந்தா மார்த்தா இல்லத்தில் மருத்துவர்களின் ஆலோசனையின்படி, ஓய்வில் இருக்கின்றார். இந்நிலையில் வத்திக்கான் வளாகத்தில், கீழை வழிபாட்டு முறை பேராயத்தின் தலைவரான கர்தினால் லியோனார்தோ சாந்த்ரி அவர்கள் தலைமையேற்று வழிநடத்திய குருத்து ஞாயிறு திருவழிப்பாட்டுத் திருப்பலியின் நிறைவில் மக்களைச் சந்தித்து வாழ்த்தினார் திருத்தந்தை.

ஏப்ரல் 6, ஞாயிற்றுக்கிழமை நோயாளர்கள் மற்றும் உலக நலவாழ்வுக்கான யூபிலியானது வத்திக்கான் புனித பேதுரு பெருங்கோவில் வளாகத்தில் நடைபெற்றதை முன்னிட்டு திருப்பயணிகளை வாழ்த்துவதற்காகவும் நன்றி கூறுவதற்காகவும் திருப்பலி நிறைவில் வத்திக்கான் வளாகம் வந்தது போல் இம்முறையும் மக்களுக்கு புனித வார வாழ்த்துக்களைத் தெரிவிப்பதற்காக வந்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

மார்ச் 23, ஞாயிறு உரோமை நகர் ஜெமெல்லி மருத்துவமனையிலிருந்து வத்திக்கான் சாந்தா மார்த்தா இல்லம் திரும்பிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஏப்ரல் 6, ஞாயிறு திருப்பலி நிறைவிலும், ஏப்ரல் 6, வியாழன் மாலை வத்திக்கான் பேதுரு பெருங்கோவிலுக்குள் சென்று செபித்த போதும், திருப்பயணிகளை வாழ்த்தினார். இம்முறை இரண்டாவது முறையாக வத்திக்கான் வளாகத்தில் இறைமக்களைச் சந்தித்து அனைவருக்கும் குருத்து ஞாயிறு மற்றும் புனித வார வாழ்த்துக்களைத் தெரிவித்தார் திருத்தந்தை.

ஏப்ரல் 12, சனிக்கிழமை மாலை மேரி மேஜர் பேராலயம் சென்று, உரோமை நகர் பாதுகாவலியான Salus Populi Romani அன்னை மரியா திரு உருவப்படத்தின் முன் சிறிது நேரத்தினை செபத்திற்காக அர்ப்பணித்தார் திருத்தந்தை.

ஏப்ரல் 13, ஞாயிற்றுக்கிழமை வத்திக்கான் வளாகத்தில் இறைமக்களைச் சந்தித்து ஏறக்குறைய 10 நிமிடங்கள் இருந்த திருத்தந்தை அவர்கள், அதன் பின் புனித பேதுரு பெருங்கோவிலுக்குள் சென்று திருநாதர் பேதுருவின் கல்லறை, புனித பத்தாம் பயஸ் கல்லறை மற்றும், திருத்தந்தை 15-ஆம் பெனடிக்ட் நினைவுச்சின்னம் ஆகியவற்றை சந்தித்து செபித்தார்.

மெரினா ராஜ் – வத்திக்கான்

# தாய்லாந்து மற்றும் மியான்மாருக்கான தேசிய மனிதாபிமான வேண்டுகோள்





CaritasMY Myanmar Relief

கூச்சிங்: சமீபத்தில் மியன்மாரும் தாய்லாந்தும் கடுமையான நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. ஆயிரக்கணக்கான உயிர்களை இழந்துள்ள நிலையில், பல குடும்பங்கள் தங்கள் வீடுகளை இழந்துள்ளனர். இதனை எதிர்கொள்ள மலேசியாவின் கத்தோலிக்க ஆயர்கள் மாநாடு (CBCM) தேசிய மனிதாபிமான வேண்டுகோள் ஒன்றை அறிவித்துள்ளது. மலேசியாவின் அனைத்து கத்தோலிக்கர்களும் இந்தத் துயர நேரத்தில் செபம், கருணை மற்றும் தாராள மனதுடன் பாதிக்கப்பட்டுள்ள நாடுகளுக்கு உதவுமாறு இறைமக்களைக் கேட்டுக் கொண்டனர்.

குருத்து ஞாயிறன்று வெளியிட்ட உரையில், CBCM தலைவர் மற்றும் கூச்சிங் மறைமாவட்ட பேராயர் சைமன் போ அவர்கள் இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதங்களைக் குறிப்பாக மியான்மாரில் உள்ள பல கத்தோலிக்க தேவாலயங்கள் முழுமையாக பாதிப்பட்டதை எண்ணி வேதனைப்படுவதாக கூறினார்.

“இத்தகைய சூழ்நிலையில் நம் நாட்டிலுள்ள அனைத்து திருஅவை மக்களும் இரக்கத்துடன் செபம் செய்வது மட்டுமல்லாமல், ஒற்றுமையுடனும் நம்பிக்கையுடனும் நிறைந்த செயல்களுடனும் செயல்பட அழைக்கப்படுகின்றனர்” என்று தமது உரையில் எழுதியுள்ளார். “மியான்மார் மக்களும் தாய்லாந்து மக்களும் இந்த வேதனையான சூழலைக் கடக்கும் போது அவர்களுடைய வேதனையை நாமும் பங்கிட்டு கொள்ள வேண்டும்” என்று அவர் வலியுறுத்தினார்.

இவர்களுக்கு உதவும் வகையில் மனிதநேய உதவி திட்டம் வரும் ஏப்ரல் 26 முதல் மே 31 வரை நடைபெறவுள்ளது. இதன் மூலம் நன்கொடை வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

1. **இரண்டாவது சிறப்பு காணிக்கை**
   – ஏப்ரல் 26–27 (இறை இரக்க ஞாயிறு விழா நாட்களில்) அனைத்து ஆலயங்களிலும் இரண்டாம் காணிக்கை எடுக்கப்படும்.
2. **நன்கொடை அளிப்பு**:
   - பண நன்கொடை – உங்கள் ஆலய அலுவலகத்தில் வழங்கலாம். அவை Caritas Malaysia கரிதாஸ் மலேசியா வழியாக அனுப்பப்படும்.
   - மின்னியல் (ஆன்லைன்) பண பரிமாற்றம்:
   - வங்கி கணக்கு பெயர்: Caritas Malaysia/ கரிதாஸ் மலேசியா
   - வங்கியின் பெயர்: RHB Bank
   - வங்கி கணக்கு எண்: 20708200054188
   - குறிப்பு: “CaritasMy Myanmar Relief”/ கரிதாஸ் மலேசியா உதவி
   - நீங்கள் செலுத்திய பண பரிமாற்றத்துக்குரிய ரசீதுகளை info@caritas.org.my என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பவும்.
   - விரைவான மின்னியல் (ஆன்லைன்) நன்கொடை அளிப்பதற்கான QR குறியீடும் வழங்கப்பட்டுள்ளது.

அனைத்து நன்கொடைகளும் நிதிகளும் CBCM-இன் அதிகாரப்பூர்வ நற்பணி பிரிவான Caritas Malaysia /கரிதாஸ் மலேசியா மூலம் நிர்வகிக்கப்படும். அவை மிக மோசமாக பாதிக்கப்பட்ட மற்றும் ஒதுக்கப்பட்ட இடங்களுக்கு உடனடி நிவாரணம் நிதியாகக் கொடுக்கப்படும். மேலும் நீண்டகால மறுசீரமைப்புப் பணிகளுக்காக நம்பகமான உள்ளூர் சமூக வளர்ச்சி குழுவினருக்குச் செலுத்தப்படும்.

**ஒற்றுமையாக செபிப்பதற்கு உங்களுக்கு ஓர் அழைப்பு**

நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்காகவும், நிவாரணப் பணியாளர்களுக்காகவும், தனிமையில் துன்பப்படுபவர்களுக்காக அனைத்து கத்தோலிக்கர்களையும் செபம் செய்ய மலேசிய ஆயர்கள் அனைவரையும் கேட்டுக்கொண்டுள்ளனர்.

"நம்பிக்கையின் திருப்பயணிகள் நாம் அனைவரும் இருளில் இருப்பவர்களுக்குக் கிறிஸ்துவின் ஒளியைக் கொண்டு செல்வோம்" என்று பேராயர் சைமன் அவர்கள் கூறினார். "நமது தாராளமான பங்களிப்பு இறைவனின் சாட்சியாக இருக்க துணைபுரியும். மேலும் கிறிஸ்துவின் உடலாகிய திருச்சபையின் உயிருள்ள சாட்சிகளாக இருந்து ஒற்றுமையாக செயல்படுவோம்.

# திருத்தைலத் திருப்பலி கொண்டாட்டம் – இறைப்பணிக்கான ஓர் உன்னத அழைப்பு



திருத்தைலத் திருப்பலி (Chrism Mass) என்பது பரிசுத்த வாரத்தின் போது வழக்கமாக நடத்தப்படும் ஓர் உன்னதமான நிகழ்வாகும். இது நம் அருட்தந்தையர் மற்றும் இறைமக்களிடையே செபத்தின் வழி ஒன்றிப்பை உருவாக்கும் ஒரு திருப்பலியாகும்.

இந்தத் திருப்பலியில் இவ்வாண்டு முழுவதும் மறைப்பணியில் பயன்படுத்தப்படும் மூன்று பரிசுத்த எண்ணெய்களான பரிசுத்த திருத்தைல எண்ணெய் (Sacred Chrism), நோயாளிகளுக்கான எண்ணெய் (Oil of the Sick), மற்றும் கிறிஸ்த மதத்தை ஏற்றுக்கொள்பவருக்கான எண்ணெய் (ஞானஸ்நானம்) (Oil of Catechumens) ஆகியவை இந்நாளில் இங்கு ஆசிர்வதிக்கப்படும். இந்தத் திருப்பலியில், அருட்தந்தையர்கள் மீண்டும் தங்கள் குருத்துவ வாக்குறுதிகளை அனைவர் முன்னிலையிலும் உறுதிபடுத்துகின்றனர். இது ஒரு புனிதமான நிகழ்வு என்றே கூறலாம்.

**கோலாலம்பூர் மறைமாவட்டம்**

ஏப்ரல் 8ஆம் தேதி, கோலாலம்பூர் மறைமாவட்டத்தில் திருத்தைலத் திருப்பலி பேராயர் ஜூலியன் லியோவ் அவர்களின் தலைமையில் திருஇருதய ஆண்டவர் ஆலயத்தில் நடைபெற்றது. இம்மறைமாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 65 குருவானவர்கள் இத்திருப்பலியில் கலந்து கொண்டனர்.

பேராயரின் மறையுரையில் குடும்பத்தின் முக்கியத்துவம் குறித்து பேசினார். நமது ஆண்டவர் இயேசு ஒரு குடும்பத்தில் இருந்து வந்தவர்தான். “நாமும் கூட குடும்பத்திலிருந்தே வந்துள்ளோம். சில குடும்பங்கள் மகிழ்ச்சியானவை. சில குடும்பங்களோ சிதறுண்டவை. ஆனால் இவை அனைத்தும் நம்மை வடிவமைக்கின்றன,” என்று அவர் கூறினார். “குருவானர்கள் அனைவரும் குடும்பத்தில் இருந்து வந்தவர்கள். இப்பொழுது ஒரு பெரிய ஆன்மீகக் குடும்பத்தின் ஒரு பகுதியாக இருக்கிறார்கள். இறைமக்களாகிய உங்கள் செபமும் ஆதரவும் எங்களுக்கு அதிகமாக தேவைப்படுகின்றது.” என்று தமதுரையில் கூறினார்.

மேலும் அவர் குருத்துவத்தின் இரு இயல்புகளைப் பற்றி பேசினார். ஒன்று பரிசுத்தம். மற்றொன்று பலவீனம்.

"சிறைபிடிக்கப்பட்டவர்களுக்கு விடுதலை, குருடர்களுக்குப் பார்வை, இயேசுவின் பெயரில் மன்னிப்பு ஆகியவற்றைக் கொண்டு வரவே நாங்கள் குருவானவர்களாக அழைக்கப்பட்டுள்ளோம். ஆனாலும் எங்கள் வாக்குறுதிகளுக்கு உண்மையாக இருக்க உங்கள் ஜெபங்களையும் கடவுளின் கிருபையையும் நம்பியிருக்கும் பலவீனமான மனிதர்கள் நாங்கள்.” என்று சொன்னார். மேலும் தமது மறையுரையில் புனித ஜோன்மரி வியானியை மேற்கோள் காட்டி பேசினார். “ஒவ்வொரு குருவானவரும் “நான் ஒரு ‘குருவானவர்”, கடவுளின் இரக்கத்தின் கருவி நான்”, என்று நினைவில் எப்பொழுதும் வைத்துக்கொள்ள வேண்டும்” என்று கேட்டுக் கொண்டார்.

திருப்பலியின் முடிவில் பேராயர் ஜூலியன் குருவானவர்களின் தன்னலமில்லாச் சேவைக்கு நன்றி தெரிவித்தார். “சில நேரங்களில், குறிப்பாக கடினமான காலங்களில் நாங்கள் உங்களைத்

# கோலாலம்பூர் உயர் மறைமாவட்டத்தில் உள்ள பொதுநிலை நம்பிக்கையாளர்களின் குறிப்பிட்ட பிரச்சனைகளுக்கான மேய்ப்புப்பணி கவனிப்பு



அன்புள்ள இறை மக்களே,

இயேசு கிறிஸ்துவின் அன்பும் அமைதியும் உங்களுக்கு உரித்தாகுக! கடந்த சில ஆண்டுகளாக மேய்ப்புப்பணி பராமரிப்பில் எதிர்கொண்டுள்ள சில சவால்கள் மிக்க குளறுபடிகளை நிவர்த்திசெய்ய பலவிதமான விவாதங்களில் அருள்பணியாளர்கள் ஈடுபட்டிருந்தனர். ஆயர்மாமன்றத்தின் உணர்வுகளைத் தழுவி, இந்தக் கருத்துகளை நாங்கள் அருள்பணி குழு, அருள்பணியாளர்கள் மன்றம் மற்றும் ஆயர் ஆலோசகர் குழு ஆகியோரோடு ஒன்றிணைந்து தேர்ந்து தெளிந்து இந்த முடிவுகளை எடுத்துள்ளோம். ஒரு குழுவாக ஒன்றித்து எடுக்கும் கூட்டு முடிவுகள் மிகவும் முக்கியமானவை என்பதை ஏற்றுக்கொள்வது அவசியம். முடிவுகளை ஒன்றாக இணைந்து எடுக்கும்போது, அவை தொடர்புடைய அனைவரிடமும் உறுதியான அர்ப்பணிப்பு மற்றும் பொறுப்புணர்வுக்கு ஊக்குவிக்கிறது. இங்கு பகிரப்பட்ட பொறுப்புணர்வு, இறைமக்களின் மேய்ப்புப்பணி வளர்ச்சிக்கு மிகவும் பயனுள்ள நடைமுறை மற்றும் சிறந்த விளைவுகளுக்கு வழிவகுக்கும்.

எனவே கோலாலம்பூர் உயர் மறைமாவட்டத்தில் பின்வரும் முடிவுகள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

1. **கலப்பு திருமணம் (கிறிஸ்தவர்-கத்தோலிக்கர்) மற்றும் கத்தோலிக்கர் - பிற சமய திருமணத்தில் நற்கருணை.**

   திருத்தந்தை இரண்டாம் ஜோன் போல் அவர்கள் 1981-ல் வெளியிட்ட ‘குடும்பமும் திருஅவையும் எனும் திருத்தூது சுற்றுமடலில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். கிறிஸ்துவ திருமணத்தில் நற்கருணை ஒரு முக்கிய அம்சமாக உள்ளது. நற்கருணை, உண்மையில் கிறிஸ்துவின் இரத்தத்தால் சிலுவையில் முத்திரையிடப்பட்டு, திருஅவையின் அன்பின் உடன்படிக்கையைப் பிரதிபலிக்கிறது. இந்த தியாகத்தில், கிறிஸ்துவ வாழ்க்கைத் துணைவர்கள் தங்களுடைய சொந்த திருமண உடன்படிக்கையின் அடித்தளத்தைப் பதிக்கிறார்கள். அது உள்ளத்தில் கட்டமைக்கப்பட்டு, தொடர்ந்து புதுப்பிக்கப்படுகிறது. திருஅவையின் மீது கிறிஸ்துவின் அன்பின் தியாகத்தின் பிரதிநிதித்துவமாக நற்கருணை அன்பிற்கு ஊற்றாக விளங்குகிறது. நற்கருணை விருந்தில் பங்கேற்பதன் மூலம் கிறிஸ்துவ குடும்பத்தின் வெவ்வேறு உறுப்பினர்கள் ஒரே உடலாகவும், நற்கருணை அன்பின் கொடையாகவும், கிறிஸ்துவ குடும்பங்கள் தூதுரை மற்றும் ஒன்றிப்பின் ஆன்மாவின் அடித்தளத்தையும் கொண்டுள்ளது என்றால் மிகையாகாது. இது கிறிஸ்தவ குடும்பத்தின் பரந்துவிரிந்த ஒற்றுமையை வெளிப்படுத்துவதோடு அதனை பகிர்ந்துகொள்கிறது. கிறிஸ்துவின் உடலில் கையளிக்கப்பட்ட மற்றும் சிந்தப்பட்ட இயேசுவின் இரத்தத்தைப் பகிர்ந்துகொள்வது, கிறிஸ்தவ குடும்பத்திற்கு திருத்தூது இயக்கத்தின் என்றுமுள ஆதாரமாக விளங்குகிறது (#57)

   இந்த உயர் மறைமாவட்டத்தில் பேராயாரிடமிருந்து வெளிப்படையான அனுமதி பெற்றபின், திருப்பலிக்குப் புறம்பே கலப்பு திருமண சடங்குகளை நிறைவேற்றுவது நடைமுறையில் உள்ளது. இந்த அணுகுமுறையின் முதன்மை நோக்கமானது, கத்தோலிக்கரல்லாதவர்கள் திருப்பலி கொண்டாட்டத்திலிருந்து ஒதுக்கப்பட்டதாக உணராமல் இருப்பதை உறுதி செய்வதோடு, ஒற்றுமையைப் பேணுவதாகும்.

   திருப்பலி கொண்டாடப்படாத சூழலில், இறக்கும் தருவாயிலிருப்போருக்கு விண்ணகப் பயணத்திற்கான திருவிருந்தாகவும், நோயாளிகளுக்கு நற்கருணை வழங்குதல், கிறிஸ்துவை நற்கருணை பிரசன்னத்தில் ஆராதனை செய்வது மற்றும் திருப்பலிக்கு வெளியேயும் நற்கருணை வழங்குவது சாத்தியம் என்பதை நாம் அறிவோம்.

   எனவே, திருமண சடங்கை (திருப்பலி நிறைவேற்றப்படாமல்) தம்பதியரோடு கலந்துரையாடியபின், கத்தோலிக்க துணைவரின் வேண்டுகோளின் பேரில் அருள்பணியாளர் கத்தோலிக்கத் துணைவருக்கும் சடங்கில் கலந்துகொள்ளும் கத்தோலிக்கர்களுக்கும் நற்கருணையை வழங்கமுடியும்.

2. **இறந்தோர் திருப்பலியில் புகழஞ்சலி**

   ‘கிறிஸ்துவ இறுதிச் சடங்குகளின் பொது அறிவுரை எனும் பகுதி இவ்வாறு குறிப்பிடுகிறது. (அ) வாசகங்களை அடிப்படையாகக் கொண்ட சுருக்கமான மறையுரை இறுதிச் சடங்குகளில் நற்செய்தி வாசிப்புக்குப் பின் கொடுக்கப்படுகிறது. மேலும் திருவிழிப்பு இறைவேண்டலின்போது வாசகங்களுக்குப் பின் மறையுரை நிகழ்த்தலாம். ஆனால் அது இறந்தவரைக் குறித்த புகழஞ்சலியாக இருக்ககூடாது. அங்கு துயரத்தில் இருப்போரைக் கவனத்தில் கொண்டு, கொடுக்கப்படும் மறையுரை கடவுளின் இரக்கத்தையும், அன்பையும் ஆண்டவருடைய பாஸ்கா மறைபொருளை எடுத்துரைக்கும் உரையாக அமைந்திருக்க வேண்டும். கடவுள் அன்பின் மறைபொருளையும் இயேசுவின் இறப்பு மற்றும் மாபெரும் உயிர்த்தெழுதலின் மறைபொருளும் இறந்தவரின் வாழ்வு மற்றும் இறப்பிலும் இருந்தன என்பதையும் தங்களின் சொந்த வாழ்க்கையிலும் குடும்ப உறுப்பினர்களும் அங்கு கூடியிருக்கும் நம்பிக்கையாளர்களும் புரிந்துகொள்ள வேண்டும். மறையுரையின் வழியாக குடும்ப உறுப்பினர்களும் சமூகமும் ஆறுதலும் வலிமையும் பெற்றுக்கொள்ளவும், இறைவார்த்தையின் வழியாக இழப்பை எதிர்கொள்ள ஊட்டம் பெற்று எதிர்நோக்கை கொண்டிருக்கவும் இயலும். (#27)

   எவ்வாறாயினும் இறந்தோருக்கான புகழஞ்சலி துயரத்தில் இருப்போருக்கு ஆறுதலடையவும் குணமடையவும் உதவுகின்றன. தனிநபர்கள் துக்கத்தில் இருந்து ஆரோக்கியமான பயணத்தைத் தொடங்க உதவுகின்றன. எனவே இறப்புத் திருப்பலி நிறைவேறியவுடன் ஒரு குடும்ப உறுப்பினர் அல்லது நண்பர் இறந்தவருக்கு புகழஞ்சலி செலுத்தலாம். ஆலயத்தில் பொருத்தமான மற்றும் மரியாதைக்குரிய உள்ளடக்கத்துடன் ஐந்து நிமிடங்கள் அல்லது அதற்கும் குறைவாக புகழஞ்சலி செலுத்துவது பரிந்துரைக்கப்படுகிறது.

3. **பெண் பீடப்பணியாளர்களுக்கான அனுமதி**

   நவம்பர் 29, 2019 தேதியிட்ட ஆயர் மேய்ப்புப்பணி மடலில், கோலாலம்பூர் உயர் மறைமாவட்டத்தில் இருக்கும் அனைத்துப் பங்குகளிலும் பீடப்பணியாளர்களாக பணி செய்ய இப்போது சிறுமிகளுக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. சில பங்குகளில் சிறுவர்கள் (ஆண்கள்) சிறுமிகளை இட அல்லது அறைகள் வசதியின்மையால் சிறுமிகளை இணைத்துகொள்ள அனுமதி மறுக்கப்பட்டது என்பதை நாங்கள் ஒப்புக்கொள்கிறோம். ஆனாலும் இன்னும் ஐந்து ஆண்டுகளில் அனைத்து பங்குகளும் திருப் பீடப்பணிக்கு ஆண் பெண் இருவரையும் ஏற்றுக்கொள்ள முன்வரும் என்பது எனது எதிர்ப்பார்ப்பாகும்.

   திருத்தந்தை பிரான்சிஸ் 2021 ஆம் ஆண்டில் வழங்கிய வார்த்தைகளை நினைவுகூர்வோம். “பொதுநிலையினரின் இருபாலினத்தவரும் தங்களின் திருமுழுக்கின் கடமைகளில் பங்கேற்று திருப்பீடப்பணியாளர் மற்றும் வாசகர் ஆகியப் பணிகளை நிறைவேற்றுவதற்கான வாய்ப்பை வழங்குவதோடு, அதன் அங்கீகாரத்தை அதிகரிக்கும். மேலும் வழிபாட்டு செயலின் மூலம் பெண்கள் உட்பட மக்கள் மற்றும் பெண்கள் உட்பட பலரின் வாழ்க்கைக்கு மதிப்புமிக்க பங்களிப்பை வழங்குவதாகவும் அமையும்.


எதிர்நோக்குக்கொண்ட , அதிக இரக்கமுள்ள எதிர்காலத்தை நோக்கி நாம் உழைக்கும்போது, நம்முடைய பகிர்ந்துகொள்ளப்பட்ட முயற்சிகளும், அர்ப்பணிப்பும் ஒருவரையொருவர் ஊக்கப்படுத்தவும் ஆதரவாக இருப்பதும் தொடர்வதாக, உங்கள் உறுதியான அர்ப்பணிப்பிற்கு நன்றி.

கிறிஸ்துவில் உங்கள் உண்மையுள்ள

மேதகு பேராயர் ஜூலியன் லியாவ் பெங் கிம் D.D.
கோலாலம்பூர் உயர் மமறைமாவட்ம் (தேதி: ஏப்ரல் 8, 2025)

# இறை இரக்கத்தின் ஞாயிறு (20.4.2025)

**திபணி** 5:12-16. **திபா** 118:2-4, 22-27. **திவெ** 1:9-13, **யோ** 20:19-31.



## ஐயம் தீர்த்த, ஐந்து காயங்கள்

திருஅவை இன்று பாஸ்கா காலத்தில் ‘இறை இரக்கத்தின் ஞாயிறைக்’ கொண்டாடுகிறது. இன்றைய நற்செய்தி புனித தோமாவின் நம்பிக்கையையும் அர்ப்பணத்தையும் கூறுகிறது.

ஆம். கடவுள் அருள் அடையாளங்களை நிகழ்த்தியதை இஸ்ரயேலர் பார்த்த போது நம்பினர். விடுதலை பயண நூல் கூறுகிறபடி, “ஏகிப்தியருக்கு எதிராக ஆண்டவர் கைவன்மை காட்டிச் செயல் புரிந்ததை உணர்ந்து ஆண்டவர் மீது மக்கள் அச்சம் கொண்டனர். மேலும் அவர்கள் ஆண்டவரிடமும் அவர் அடியார் மோசேயிடமும் நம்பிக்கைவைத்தனர்” (விப 14:31).

அவர்கள் காண்பதுவரை நம்பவில்லை. கடவுளின் வெளிப்பாட்டை அவர்கள் கண்டு, பின்னர் நம்பினார்கள். அவர்கள் செங்கடல் அருகே வந்தபோது கடவுள்மீது உண்மையில் ஐயமுற்றார்கள். ஆனால் கடவுள் வழியைத் திறந்து செங்கடலை அவர்கள் கடக்கச் செய்த போதும் பார்வோனின் படைகள் கடலில் மூழ்கியதை அவர்கள் பார்த்தபோது அவர்கள் நம்பினார்கள். அவர்களின் இத்தகு நம்பிக்கையினால் தடுமாறும் ஒரு வாழ்க்கையையே அவர்கள் வாழ்ந்தார்கள். அவர்களின் நம்பிக்கை அன்றைய சூழ்நிலையை சார்ந்து இருந்தது எனலாம்.

மாறாக கடவுள் நம்மிடம் எதிர்பார்க்கும் நம்பிக்கை இத்தகையதன்று. வழ்நிலைகள் சாதகமாயிருந்தால் மட்டும்தான் நாம் நம்புகிறோமா? வழ்நிலைகள் மாறுபட்டிருக்குமாயின் நமது அடிப்படை நம்பிக்கையின் நிலைபாடு என்ன?

இதுதான் இன்றைய நற்செய்தி நமக்கு போதிக்கிறது. தோமையர் முதலில் அவநம்பிக்கை கொண்டிருந்தாலும் உயிர்த்த இயேசுவை நேரில் கண்டபின் ஏற்பட்ட நம்பிக்கையின் சூழல் வேறு.

முதலில் ஐயப்பட்டு, அது நீக்கப்பட்டு தெளிவடைந்து, உண்மையில் உறுதி பெற்ற தோமையார், மறையுண்மைகளின் விசுவாச அறிக்கையை நமக்கு போதிக்கிறார். இதற்கு சான்றுதான் அவரின் அவருடைய அன்றைய சூழ்நிலை.

“என்னைக் கண்டதால் விசுவாசம் கொண்டாய்; காணாமல் விசுவசிப்பவனே பாக்கியவான்” என்பதன் வழியாக அவரைக் காணாது, அவருடைய உரையை கேளாது நம்புபவர்களேயே ஏற்கிறார் பாராட்டுகிறார்.

முதல் வாசகத்தில் இயேசுவின் வல்லமை அப்போஸ்தலர்களுக்கு வழங்கப்பட்டது. ஆகவே இயேசு தமது மீட்புப் பணியின்போது மக்களை குணமாக்கிய காட்சிகள் மீண்டும் நிகழ்ந்தன. மக்கள் கூட்டங்களும் அவர்களை பின்பற்றினர்.

எனவே இன்றைய தோமாவின் நம்பிக்கையின்மை அதன்பின் அவர் அடைந்த தெளிவு, நம்பிக்கை, மனஸ்தாபம், ஏற்றுக்கொண்ட துணிவு இவைகளை மனதில் நிறுத்துவோம்.

எனவே, நமது உயிருள்ள ஆண்டவர் என்றும் இரக்கமுள்ளவர், நம்பிக்கையோடு அவரிடம் செல்வோம். அன்புக்கு உண்டோ அடைக்கும் தாழ் என்பது போல அன்பே உருவான இறைவன் நம்மை உள்ளங் கையில் தாங்கி பிடிப்பார் என முழு நம்பிக்கையோடு உயிர்த்த ஆண்டவரில் அடைக்கலம் புகுவோம்.

ஆ.வி.டேவிட்



தவறவிட்டிருக்கலாம். இருப்பினும் இயேசுவின் இதயத்திற்கு ஏற்ப அனைவரும் நல்ல மேய்ப்பர்களாக இருக்க உங்கள் அனைவரது செபங்கள் எங்களுக்குத் தேவை” என்று கூறி தமது உரையை முடித்தார்.

## பினாங்கு மறைமாவட்டம்

அதே நாளில், பினாங்கு மறைமாவட்டத்திலும் திருத்தைலத் திருப்பலி நடைபெற்றது. தூய ஆவியார் பேராலயத்தில் நடைபெற்ற இத்திருப்பலியைக் கார்டினல் செபஸ்டியன் ஃபிரான்சிஸ் அவர்கள் தலைமையேற்று நடத்தினார்.

அவர் தமது மறையுரையில் “கிறிஸம்” என்ற சொல்லின் அர்த்தத்தை விளக்கினார். “கிறிஸம்” என்பது கிரேக்கச் சொல்லான கரிஸ்மா என்பதிலிருந்து வந்தது. அதாவது அபிஷேகம். இந்த வழிபாட்டின்





போது ஆசீர்வதிக்கப்பட்ட எண்ணெய்கள் இறைபணி, குணப்படுத்துதல் மற்றும் ஒற்றுமையின் வெளிபாடு என்றும் அவர் விளக்கினார்.

“இந்தத் திருப்பலி கிறிஸ்துவின் மீதான நம் அடையாளத்தை நினைவூட்டுகிறது. கிறிஸ்து அபிஷேகம் செய்யப்பட்டவர். ஏழைகளுக்கு நற்செய்தியையும் சிறையில் இருப்பவர்களுக்கு விடுதலையும் உள்ளம் உடைந்தவர்களுக்கு சிகிச்சை அளிக்கவே அவர் இவ்வுலகிற்கு வந்தார்,” என்றார்.

மேலும் அவர் ஒவ்வொரு எண்ணெயின் முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்தார். “இந்த எண்ணெய்கள் வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் கடவுளின் அருள் நம்முடன் இருக்கிறது என்பதை உணர்த்துகின்றன. குழந்தைகள், நோயுற்றோர், புதிதாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் மற்றும் விசுவாசிகள் அனைவரும் திருச்சபையின் ஊழியத்தின் மூலம் ஒன்றாக அரவணைக்கப்படுகின்றனர்,” என்று கூறினார்.

குருவானவர்கள் தங்கள் வாக்குறுதியைப் புதுப்பிக்கும் சமயத்தில், அவர் இறைமக்களிடம், “உங்கள் குருவானவர்களுக்காக செபியுங்கள். அவர்கள் அனைவரும் ஆண்டவரின் அபிஷேகத்தால் என்றும் நிரம்பி, கிறிஸ்துவின் ஊழியராக தங்களது இறைப்பணியை நிறைவாக செய்வார்களாக. எனக்காகவும் செபியுங்கள். நான் இந்தத் திருத்னதர் பதவிக்கு விசுவாசமாகவும் கிறிஸ்துவின் சாயலாகவும் நல்ல மேய்ப்பராகவும், ஆசிரியராகவும் இருந்து அனைவருக்கும் நல்ல இறைபணியாளராக இருக்க வேண்டும்,” என்று கேட்டுக் கொண்டார்.

இறுதியாக, “திருத்தைலத் திருப்பலி என்பது அனைத்து விசுவாசிகளும் தங்களது திருமுழுக்கு மூலம் அழைக்கப்பட்டவர்கள் என்றும் சொல்லலாம். "கடவுளின் மக்களான நாம் கிறிஸ்துவை இவ்வுலகிற்குக் கொண்டு வர பரிசுத்த ஆவியால் அபிஷேகம் செய்யப்படுகிறோம் என்பதற்கான அறிகுறியாகும்,” என்று கூறி தமது உரையை முடித்தார்.